# தொல்காப்பிய உரையாசிரியர்கள் சுட்டும் செயப்படுபொருளின் வகைகள்

தி. மோகன்ராஜ்
*முனைவர்ப் பட்ட ஆய்வாளர், இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010*

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழில் இரண்டாம் வேற்றுமையாகச் செயப்படுபொருள் வேற்றுமை கொள்ளப்படுகிறது. தொல்காப்பியம் 28 வினைப் பொருள்கள் செயப்படுபொருள் ஏற்று வருவன என்று குறிப்பிடுகிறது. அந்நூற்பாவிற்கு உரை எழுதியுள்ள உரையாசிரியர்கள் செயப்படுபொருளைப் பல வகைகளாக வகுத்துத் தொல்காப்பியம் சுட்டும் 28 வினைப்பொருள்களையும் அப்பகுப்புகளில் அடக்கியுள்ளனர். அவர்களின் வகைப்பாட்டில் ஒற்றுமையும் வேற்றுமையும் காணப்படுகின்றன. இக்கட்டுரை, உரையாரிசிரியர்கள் செய்துள்ள வகைப்பாடுகளை விளக்குவதுடன் அவற்றுக்கு இடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளைக் குறித்தும் ஆராய்ந்து விளக்கியுள்ளது.

**குறியீட்டுச் சொற்கள்**

தொல்காப்பியம், சொல்லதிகாரம், செயப்படுபொருள், உரையாசிரியர்கள், செயப்படுபொருள் வகைகள்

**முன்னுரை - செயப்படுபொருள் வேற்றுமை**

வேற்றுமை என்பது வாக்கியத்தில் அல்லது தொடரில், பெயர்ப்பொருளானது வினையுடன் கொண்டுள்ள உறவை விளக்குவதாகும். தமிழில் எழுவாய் வேற்றுமை தொடங்கி ஆறாவது நீங்கலாக ஏழாவதான இடவேற்றுமைவரை இக்கூற்றுப் பொருந்தும். இத்தொடர்பினைத் தொழில் முதனிலை என்பர் தொல்காப்பியர்(தொல்.சொல்.108). ஆறாம் வேற்றுமை பெயர்கொண்டு முடியும்.

எனினும், இன்றைய மாற்றிலக்கண விளக்கத்தின்படி ஆறாம் வேற்றுமைத் தொடர் என்பது ஒரு முழு வாக்கியத்தின் புறநிலை அமைப்பு என்று விளக்கப்படுவதால், ஆறாம் வேற்றுமையும் வினையோடு தொடர்புடையதுதான்(செ.வை.சண்முகம், 2004, ப.139). எட்டாவதான, விளி வேற்றுமை மட்டும் படர்க்கைப் பெயரை முன்னிலையாக வேறுபடுத்துவது என்ற நிலையில் வேற்றுமையாகக் கொள்ளப்படுகிறது.

தமிழில் வேற்றுமைகள் எட்டு என்பது தொல்காப்பியத்திலிருந்தே ஒரு கோட்பாடாக முன்வைக்கப்பட்டுள்ளது. பின்வந்த இலக்கண நூல்களும் அதன் உருபுகளில் ஆங்காங்கே மாற்றங்களைச் செய்தனவே அன்றி வேற்றுமைகளின் எண்ணிக்கையிலும் வரிசையிலும் எந்த மாற்றத்தையும் செய்யவில்லை. எட்டு வேற்றுமைகளுள் இரண்டாம் வேற்றுமை என்பது செயப்படுபொருள் வேற்றுமை ஆகும். எழுவாய் ஆற்றும் வினையின் தாக்கத்தை அல்லது வினையின் பயனை ஏற்கும் பொருள் செயப்படுபொருள் எனலாம்((முத்துச்சண்முகன்,1988,ப.7). ‘செயப்படுபொருளாவது வினைமுதல் தொழிற்பயன் உறுவது’ என்பர் சேனாவரையர். ‘ஒரு வினைமுதல் செய்யும் தொழிலினை உறுவது செயப்படுபொருள்’ என்பர் நச்சினார்க்கினியர்.

**செயப்படுபொருளின் வகைகள்**

தொல்காப்பியம் இரண்டாம் வேற்றுமை பற்றி இரண்டு நூற்பாக்களில் விளக்கியுள்ளது. இவை இரண்டையும் ஒரே நூற்பாவாகக் கொள்வார் இளம்பூரணர். முதல் நூற்பா,

இரண்டாகுவதே
ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பு
அவ்விரு முதலின் தோன்றும் அதுவே (தொல்.சொல்.72)

என்பதாகும். இதில் இடம்பெறும் வினை, வினைக்குறிப்பு என்னும் சொற்கள் முறையே தெரிநிலை வினையையும் குறிப்பு வினையையும் குறிப்பனவாகத் தெய்வச்சிலையார் ஒழிந்த ஏனைய உரையாசிரியர்கள் விளக்குவர். தெய்வச்சிலையார், வினைக்குறிப்பு என்பது செயப்படுபொருளைக் குறிப்பதாக விளக்குவார். அடுத்த நூற்பா, இரண்டாம் வேற்றுமை ஏற்றுவரும் வினைப்பொருள்கள்

பற்றிப் பேசுகிறது. இங்கு, 28 வினைப்பொருள்கள் தொழிற்பெயர் வடிவில் தரப்பட்டுள்ளன. இவை, வினைப்பொருள் என்பதால், ஒவ்வொரு வினைப்பொருளையும் குறித்துவரும் வினைச்சொற்கள் இரண்டாம் வேற்றுமை ஏற்றுவரும் என்று உரையாசிரியர்கள் விளக்கியுள்ளனர். ‘காப்பு முதலாயின, பொருள் பற்றி ஓதப்பட்டமையான் ஊரைக் காக்கும், ஊரைப் புரக்கும், ஊரை நிகர்க்கும்...என்பன போல்வனவெல்லாம் கொள்க’ என்பர் சேனாவரையர். இக்கட்டுரை, இந்த நூற்பாவிற்கு உரையாசிரியர்கள் அளித்துள்ள விளக்கங்களை அடிப்படையாகக் கொள்வதால், அந்நூற்பா முழுவதுமாக இங்குத் தரப்படுகிறது.

காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்
ஓப்பின் புகழின் பழியின் என்றா
பெறலின் இழவின் காதலின் வெகுளியின்
செறலின் உவகையின் கற்பின் என்றா
அறுத்தலின் குறைத்தலின் தொகுத்தலின் பிரித்தலின்
நிறுத்தலின் அளவின் எண்ணின் என்றா
ஆக்கலின் சார்தலின் செலவின் கன்றலின்
நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்றா
அன்ன பிறவும் அம்முதற் பொருள
என்ன கிளவியும் அதன்பால என்மனார் (தொல்.சொல்.73)

மேற்கண்ட நூற்பாவிற்கு உரை எழுதியுள்ள இளம்பூரணர் நீங்கலான சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், கல்லாடனார், ஒருவர் ஆகிய உரையாசிரியர்கள் செயப்படுபொருள் பலவகைப்படும் என்று குறிப்பிட்டு அதன் பாகுபாடுகளை விளக்கியுள்ளனர். எனினும், ஒவ்வொருவரும் தத்தம் வகைப்பாட்டில் பிறருடன் சிலவிடங்களில் ஒத்தும் சிலவிடங்களில் வேறுபட்டும் நிற்கின்றனர். இளம்பூரணர் எந்த வேறுபாட்டையும் குறிப்பிடவில்லை. ஆகையால், இளம்பூரணர் நீங்கலாக மேற்குறிப்பிட்ட ஐந்து உரையாசிரியர்களும் செயப்படுபொருள் குறித்துச் செய்துள்ள வகைப்பாடுகளை ஒருங்குவைத்து நோக்குவதும் அவற்றுக்கு இடையே உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளைக் கண்டறிவதும் இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

செயப்படுபொருளை ஐந்து உரையாசிரியர்களும் மொத்தம் ஏழு பிரிவுகளில் வகைப்படுத்தியுள்ளனர். அவை கீழ்வருமாறு.

1. இயற்றப்படுவது –வேறுபடுக்கப்படுவது –எய்தப்படுவது

2. உண்டாக்குதல் வேறுபடுத்துதல் உறுவித்தல் உறுதல்

3. காரண காரியம் தோன்ற நிற்றல் தோன்றாது நிற்றல்

4. தெரிநிலைச் செயப்படுபொருள் தெரியாநிலைச் செயப்படுபொருள்

5. செய்வானும் செயப்படுபொருளும் ஒன்றாய் வருவது வேறாய் வருவது

6.தன்கண் தொழில் நிகழும் செயப்படுபொருள் தன்கண் தொழில் நிகழாச் செயப்படுபொருள்

7.செய்வான் கருத்துள்வழிச் செயப்படுபொருள் கருத்தில்வழிச் செயப்படுபொருள்

இப்பிரிவுகள் ஒவ்வொன்றும் பின்வரும் பகுதியில் விளக்கப்படுகின்றன.

**1. இயற்றப்படுவது –வேறுபடுக்கப்படுவது எய்தப்படுவது**

இந்த வகையினைச் சேனாவரையர், நச்சினார்க்கினியர், ஒருவர் ஆகிய மூன்று உரையாசிரியர்களும் குறிப்பிட்டுள்ளனர். தொல்காப்பியத்தில் பட்டியிலடப்பட்டுள்ள 28 வினைப்பொருள்களையும் இவர்கள் இயற்றப்படுவது, வேறுபடுக்கப்படுவது, எய்தப்படுவது என்று மூன்று பிரிவுகளுள் அடக்குகின்றனர். இவற்றைப் பகுப்பதில் இவர்களுக்குள் எந்த வேறுபாடும் காணப்படவில்லை.

சேனாவரையர், ‘இயற்றுதலாவது முன் இல்லதனை உண்டாக்குதல்’ என்று இரண்டாம் வேற்றுமை பற்றிய முதல் நூற்பாவில் விளக்கம் கொடுத்து அடுத்த நூற்பாவில் வரும் வினைப்பொருளான இழை என்பதற்குச் சான்று காட்டுமிடத்தில் ‘எயிலை இழைத்தான் என்பது இயற்றப்படுவது’ என்று விளக்கியுள்ளார். ஏனைய இரு உரையாசிரியர்களும் இதேபோன்ற விளக்கத்தையே அளித்துள்ளனர். ஒருவர் பெரும்பாலும் நச்சினார்க்கினியரின் உரையையே பின்பற்றியுள்ளார். நூற்பா சுட்டியுள்ள 28 வினைப்பொருள்களில் இழை என்னும் ஒன்று மட்டுமே இயற்றப்படுதல் என்னும் பிரிவினுள் அடக்கப்பட்டுள்ளது. இதற்குச் சேனாவரையர்

‘இயற்றப்படுவது ஒரு தன்மைத்தாகலின் அதற்கு ஒரு வாய்பாடே கூறினார்’ என்று காரணம் கூறியுள்ளார். நச்சினார்க்கினியரும் இதே காரணத்தைத்தான் முன்வைத்துள்ளார்.

‘வேறுபடுத்தலாவது முன் உள்ளதனைத் திரித்தல்’ என்று சேனாவரையர் குறிப்பிடுகிறார். ஓப்பு, இழத்தல், அறுத்தல், குறைத்தல், தொகுத்தல், பிரித்தல், ஆக்கல், சிதைத்தல் ஆகிய எட்டையும் இப்பிரிவில் அடக்கி அவற்றுக்கான சான்றுகளையும் முறையே கொடுத்திருக்கிறார். நச்சினார்க்கினியரும் இந்த எட்டுப் பொருள்களையும் வேறுபடுத்தலில் அடக்கினாலும் அவற்றை இரண்டிரண்டாக நான்கு பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவிலும் உள்ள இரண்டு வினைப்பொருள்களுக்கும் இடையிலான வேறுபாடுகளைச் சுட்டியுள்ளார். சான்றாக, ஓப்பு, இழவு ஆகிய இரண்டையும் ஒரு பிரிவினுள் அடக்கி, ‘கிளியை ஓப்பும், பொருளை இழக்கும். இவற்றிற்கு வேறுபாடு, ஒரு தொழில் உறுவிக்கப்பட்டுத் தானே போதலும் தொழிற்பயன் உற்ற மாத்திரையாய் ஒருவன் கொண்டுபோகப் போதலும்’ என்று விளக்குகிறார். ஒருவர் நச்சினார்க்கினியரை உள்ளபடியே பின்பற்றியுள்ளார்.

இதில் இடம்பெறும் ஆக்கல் என்பது உருவாக்குதல் அல்லது உண்டாக்குதல் என்னும் பொருளில் இல்லாமல் மிகுதல் என்னும் பொருளில் உரையாசிரியர்களால் கையாளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இளம்பூரணர் நீங்கலாக எல்லா உரையாசிரியர்களும் அறத்தை ஆக்கும் என்னும் ஒரே சான்றினையே இதற்குத் தந்துள்ளனர். ஆக்கல் என்பது உருவாக்குதல் அல்லது உண்டாக்குதல் எனும் பொருளில் வரின் அது இயற்றப்படுதலின் கீழ் அடங்கும். ஆனால், இம்மூன்று உரையாசிரியர்களும் வேறுபடுக்கப்படுதல் என்னும் பிரிவிலேயே இதனை அடக்குகின்றனர். நச்சினார்க்கினியரும் மிகுத்தல் என்று இதன் பொருளைச் சுட்டியுள்ளார். இளம்பூரணர் ஊரை ஆக்கும் என்று சான்று காட்டியுள்ளார். ஊரினை மேம்படுத்துதல் என்னும் பொருளில் இந்தச் சான்றையும் நாம் வேறுபடுக்கப்படுதல் என்னும் பிரிவிலேயே கொள்ளலாம். எனவே, இங்கு ஆக்கல் என்பது மிகுத்தல் என்னும் நிலையில் வேறுபடுக்கப்படுதல் என்னும் பொருளிலேயே உரையாசிரியர்களால் கொள்ளப்பட்டுள்ளது என்பது புலனாகிறது.

'எய்தப்படுதலாவது இயற்றுதலும் வேறுபடுத்தலும் இன்றித் தொழிற் பயனுறுந் துணையாய் நிற்றல்' என்று விளக்கிக் காத்தல், ஒப்பு, ஊர்தி, புகழ், பழி, பெறல், காதல், வெகுளி, செறல், உவகை, கற்பு, நிறுத்தல், அளவு, எண், சார்தல், செலவு, கன்றல், நோக்கல், அஞ்சல் என்று எஞ்சியுள்ள 19 வினைப்பொருள்களையும் இதன்கண் சேனாவரையர் அடக்கியுள்ளார். ஏனைய இரு உரையாசிரியர்களும் இதேபோன்று விளக்கித் தகுந்த சான்றுகளைக் காட்டியுள்ளனர். மேலும், நச்சினார்க்கினியர், எய்தப்படுதலின் கீழ்வரும் வினைப்பொருள்களைத் 'தொழில் உறுவனவும் தொழிற்பயன் உறுவனவுமாய் வரும் வேறுபாடு உணர்க' என்று மேலும் பகுக்கிறார். ஆனால், எந்தச் சான்றும் காட்டவில்லை. பொதுவாகக் குறிப்பிட்டுள்ள சான்றுகளிலிருந்து இதற்கான விளக்கத்தை உய்த்துணருமாறு உள்ளது. தேரை ஊரும் என்னும் சான்று, ஊர்தல் தொழில் தேரின் மீது உறுவது ஆகையால் ஊர்தல் பற்றி வரும் செயப்படுபொருளைத் தொழில் உறுவன என்பதற்குச் சான்றாகக் கொள்ளலாம். ஊரைக் காக்கும் என்னும் சான்று, காத்தலினால் நேரும் பயனை ஊர் பெறும் நிலையில் இதனைத் தொழிற்பயன் உறுவன என்பதற்குச் சான்றாகக் கொள்ளலாம். ஒருவரும் நச்சினார்க்கினியர் உரையை ஒத்துச்செல்கிறார்.

இதுவரை நாம் பார்த்த இந்த முதலாம் பிரிவில் அடங்கும் வினைப்பொருள்களை கீழ்க்காணும் முறையில் அட்டவணைப்படுத்தலாம்.

| **இயற்றப்படுவது 1** | **வேறுபடுக்கப்படுவது 8** | **எய்தப்படுவது-19** |
|---|---|---|
| இழை | ஒப்பு, இழத்தல், அறுத்தல், குறைத்தல், தொகுத்தல், பிரித்தல், ஆக்கல், சிதைத்தல் | காத்தல், ஒப்பு, ஊர்தி, புகழ், பழி, பெறல், காதல், வெகுளி, செறல், உவகை, கற்பு, நிறுத்தல், அளவு, எண், சார்தல், செலவு, கன்றல், நோக்கல், அஞ்சல் |

அட்டவணை 1: சேனாவரையரின் செயப்படுபொருள் பாகுபாடு

**2. உண்டாக்குதல் –வேறுபடுத்துதல் உறுவித்தல் உறுதல்**

இப்பகுப்பினைக் கல்லாடனார் மட்டுமே மேற்கொண்டுள்ளார். வேறு யாரும் இதைப் பற்றிக் குறிப்பிடவில்லை. 'அச்செயப்படுபொருள்தான் இல்லதொன்றாய் உண்டாக்கப்படுவதும் உள்ளது ஒன்றாய் உடல் வேறுபடுக்கப்படுவதும், உள்ளது ஒன்றாக ஒருதொழில் உறுவிக்கப்படுவதும் உள்ளது ஒன்றாய் ஒன்றனால் உறப்படுவதும் எனப் பலவகையாம்' என்று நான்கு வகைகளாகப் பிரித்து அவற்றுக்கான சான்றுகளையும் தந்துள்ளார்.

1. இல்லதொன்று உண்டாக்கல்: எயிலை இழைத்தான்
2. உள்ளது ஒன்றனை உடல் வேறாக்கல்: மரத்தைக் குறைத்தான்
3. உள்ளது ஒன்று ஓர் தொழிலை உறுவித்தல்: கிளியை ஓப்பும்
4. உள்ளது ஒன்றனை ஒன்று உறுதல்: நூல் நூற்றான் (நூலை நூற்றான்)

இங்கு உண்டாக்குதல் மற்றும் வேறுபடுத்தல் ஆகிய இரண்டும் முதல் வகையில் இயற்றப்படுதல் மற்றும் வேறுபடுக்கப்படுதல் ஆகிய இரண்டோடு பொருந்துமாறு உள்ளன. எனினும், முற்பிரிவில் வேறுபடுக்கப்படுதல் என்பதன்கீழ் அடக்கப்பட்ட ஓப்புதல் என்பது கல்லாடனாரால் உறுவித்தல் என்னும் பிரிவின் கீழ் அடக்கப்பட்டுள்ளது. செயப்படுபொருளை ஒரு செயல் செய்யுமாறு எழுவாய் வினையாற்றுதல் என்று இதனை விளக்கலாம். கிளிகள் நீங்குதல் தொழிலைச் செய்யுமாறு எழுவாய் கிளியை ஓப்பியது என்பதே கிளியை ஓப்பும் என்பதாகும். நான்காவது வகைப்பாட்டின் விளக்கம் முற்பிரிவின் எய்தப்படுவது என்பதனோடு ஒத்திருக்கிறது. நூல் நூற்றான் என்று கல்லாடனார் காட்டியுள்ள சான்று விளங்கவில்லை. அவர் காட்டியுள்ள சான்றில் இரண்டாம் வேற்றுமை தொக்கி வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. தூணைச் சார்ந்தான், புலியை அஞ்சும் என்னும் சான்றுகள் இதற்குப் பொருந்துமாறு உள்ளன.

**3. காரண காரியம் தோன்ற நிற்றல் – தோன்றாது நிற்றல்**

தெய்வச்சிலையார் மட்டுமே இந்தப் பாகுபாட்டைச் செய்துள்ளார். 'காரிய காரணம் தோன்றி நிற்பனவும் தோன்றாது நிற்பனவும் என இருவகைப்படும் என்றற்கு வேறு ஓதினார் என்க. ஆடையை நெய்தான், குடத்தை வனைந்தான் இவை காரண காரியம் தோன்ற நின்றன. ஊரைக் காத்தான் என்பது தோன்றாது நின்றது' என்பது தெய்வச்சிலையார் உரை.

தெய்வச்சிலையார் பகுப்பின்படி மேற்கண்ட முதற்பிரிவின் இயற்றப்படுதல் என்பது காரண காரியம் தோன்ற நிற்பதனோடு பொருந்துகிறது. சிவலிங்கனாரும் காரண காரியம் என்பது காரணத்தால் விளையும் காரியம் என்றே விளக்கம் கொடுத்துள்ளார்(ஆ.சிவலிங்கனார்(தொ), 2016, ப.92). ஏனைய வேறுபடுக்கப்படுதல் மற்றும் எய்தப்படுதல் ஆகிய இரண்டும் காரண காரியம் தோன்றாது நிற்பன என்னும் பிரிவில் அடங்குகின்றன.

**4. தெரிநிலைச் செயப்படுபொருள் –-தெரியாநிலைச் செயப்படுபொருள்**

கல்லாடனார் மட்டுமே இப்பகுப்பினைச் செய்துள்ளார். தெரிநிலைச் செயப்படுபொருளுக்கு மரத்தைக் குறைத்தான் என்னும் செய்வினை வாக்கியத்தையும் தெரியாநிலைச் செயப்படுபொருளுக்கு அதன் செயப்பாட்டுவினை வாக்கியமான சாத்தனால் மரங்குறைக்கப்பட்டது என்னும் வாக்கியத்தையும் சான்றாகக் காட்டியுள்ளார். இங்குத் தெரிநிலைச் செயப்படுபொருள் என்பது வாக்கியத்தில் வெளிப்படையாகச் செயப்படுபொருளாக வருவதைக் குறிக்கிறது. தெரியாநிலைச் செயப்படுபொருள் என்பது பொருள் நிலையில் செயப்படுபொருளாக இருக்க வாக்கிய அமைப்பில் அது வேறு நிலையில் அமைந்திருப்பதைக் குறிக்கிறது. அவர் செய்துள்ள இந்தப் பகுப்பு மாற்றிலக்கண மொழியியலார் வகுக்கும் புதைநிலை புறநிலை அமைப்போடு தொடர்புடையதாக உள்ளது. அவர் கொடுத்துள்ள சான்றுகள்,

தெரிநிலைச் செயப்படுபொருள் – மரத்தைக் குறைத்தான்.

தெரியாநிலைச் செயப்படுபொருள் – சாத்தனால் மரங்குறைக்கப்பட்டது.

தெரிநிலைச் செயப்படுபொருளுக்கான சான்றில் எழுவாய், தோன்றா எழுவாயாக அமைந்துள்ளது. இரண்டு சான்றுகளையும் கீழ்க்காணுமாறு விரிக்கலாம். அடைப்புக்குறிக்குள் இருப்பது சான்றில் தொக்கி நிற்பதாகும்.

வா. 1 : (சாத்தன்) + மரத்தைக் + குறைத்தான்

வா .2 : சாத்தனால் + மரம் + குறைக்கப்பட்டது

இங்குக் காட்டப்பட்டுள்ள இரண்டு வாக்கியங்களும் மாற்றிலக்கணப்படி ஒரே பொருளுடைய வாக்கியங்களாகும். மேலும், சில மாற்றிலக்கண விதிகள் மூலம் வா.1’இலிருந்து வா.2’இனை

வருவிக்கமுடியும். இவ்விரண்டு வாக்கியங்களும் பொருள் நிலையில் ஒற்றுமையுடையன என்பதைக் கல்லாடனாரும் உணர்ந்துள்ளார் என்பதைக் கீழ்வரும் அவரது கூற்று மெய்ப்பிக்கிறது. அடைப்புக்குறிக்குள் இருப்பது வசதிக்காகக் இக்கட்டுரையாளரால் கொடுக்கப்பட்டது.

'மற்றிஃது(வா.2'இல் மரம்) எழுவாய் அன்றோவெனின், சொன்னிலை அன்னதாயினும் சாத்தனான் என நின்ற உருபினை நோக்கப் பொருள் நிலை அன்னதன்று என உணர்க'

என்பது அவர் விளக்கமாகும். அதாவது, வா.2'இல், சாத்தனான் என மூன்றாம் வேற்றுமை உருபேற்று நிற்கும் பெயர் பொருள்நிலையில் எழுவாய் என்றும் மரம் என்று எழுவாயாக நிற்கும் பெயர் பொருள் நிலையில் செயப்படுபொருள் என்றும் கல்லாடனார் விளக்கியுள்ளார். செய்வினை வாக்கியத்திற்கும் செயப்பாட்டுவினை வாக்கியத்திற்கும் இடையில் உள்ள உறவினைக் கண்டு விளக்கியுள்ள நிலையில் இது சிறப்பான விளக்கமாகும்.

இந்நிலையில், தொல்காப்பியர் குறித்துள்ள 28 வினைப்பொருள்களும் இவ்வாறு செய்வினை வாக்கியமாகவும் செயப்பாட்டுவினை வாக்கியமாகவும் மாற்றமுடியுமா என்று நோக்கும்போது காக்கும், புகழும் போன்ற வினைகளை அவ்வாறு மாற்றலாம் எனினும் ஒப்பு, செலவு போன்ற வினைகளைச் செயப்பாட்டு வினை வாக்கியங்களாக மாற்றமுடியாது. மாற்றினால் பிழையான வாக்கியங்களே உருவாகும்.

சாத்தன் தந்தையை ஒக்கும் *தந்தை சாத்தனால் ஒக்கப்பட்டான்

சாத்தன் நெறியைச் சென்றான் *நெறி சாத்தனால் செல்லப்பட்டது

அடிப்படையில் இவை செயப்படுபொருள் குன்றிய வினைகளாகும். எனினும், புறநிலையில் இவை செயப்படுபொருள் பெறும் வினைகளாக உள்ளன என்பதைத் தொல்காப்பியர் அறிந்த நிலையில் இவற்றையும் இரண்டாம் வேற்றுமையின் கீழ் அடக்கியுள்ளார். இதனையே செ.வை.சண்முகமும் கீழ்க்காணுமாறு குறிப்பிட்டுள்ளார்.

'...செயப்படுபொருள் குன்றிய வினை(Intransitive Verb) ஆக இருப்பதால்தான் செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்ற முடியவில்லை. எனவே செயப்படுபொருள் குன்றிய

வினைகள் இரண்டாம் வேற்றுமையை ஏற்பது புறநிலையில்தானே தவிரப் புதைநிலையில் அன்று' (ஆ.சிவலிங்கனார்(தொ), 2016, ப.107).

எனவே, கல்லாடனாரின் இப்பகுப்பில் காப்பு, புகழ், அஞ்சல் ஆகிய வினைகள் தெரியாநிலைச் செயப்படுபொருளாக மாறும் தன்மையுடையன அல்ல. பிற வினைப் பொருள்கள் தெரிநிலைச் செயப்படுபொருள், தெரியாநிலைச் செயப்படுபொருள் என்னும் இரண்டு நிலைகளிலும் அமையும்.

### 5. செய்வானும் செயப்படுபொருளும் ஒன்றாய் வருவது – வேறாய் வருவது

நச்சினார்க்கினியரும் கல்லாடனாரும் இப்பகுப்பினைக் குறிப்பிட்டுள்ளனர். 'செய்வானும் செயப்படுபொருளும் என்னும் இரண்டும் ஒன்றேயாயும் வரும்' என்பர் கல்லாடனார். இருவரும் 'சாத்தன் தன்னைக் குத்தினான்' என்னும் சான்றினையே தந்துள்ளனர். இங்கு, எழுவாயும் செயப்படுபொருளும் சாத்தன்தான். இந்நிலையில், தான் என்னும் தற்சுட்டுப் பெயர் வேற்றுமை ஏற்றுச் சாத்தனைக் குறித்தே வந்துள்ளது. இது, மொழியியலில் குறிப்பிடப்படும் 'Reflexive Pronoun' என்பதனோடு தொடர்புடையது. இந்த வடிவத்தைத் தற்சுட்டுச் செயப்படுபொருள் என்று குறிப்பிடலாம்.(செ.வை.சண்முகம், 2004, ப.104).

சாத்தன் தன்னைக் குத்தினான் –Sathan punched himself.

ஆங்கில வாக்கியத்தில், 'Himself' என்னும் சொல் ஆற்றும் செயலையே தமிழில் தன்னை(தான்+ஐ) என்னும் பெயர்த்தொடர் ஆற்றுகிறது. தற்காலத் தமிழில் இவ்வகை வாக்கியங்களின் வினைமுற்றுகள் 'கொள்' என்னும் துணைவினை கொண்டு முடிகின்றமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

சாத்தன் தன்னைக் குத்தினான் சாத்தன் தன்னைக் குத்திக்கொண்டான்.

### 6. தன்கண் தொழில் நிகழும் செயப்படுபொருள் – தன்கண் தொழில் நிகழாச் செயப்படுபொருள்

இப்பகுப்பினையும் நச்சினார்க்கினியர் மற்றும் கல்லாடனார் ஆகிய இருவர் மட்டுமே செய்துள்ளனர். எனினும், இருவருக்கும் இடையில் நுட்பமான வேறுபாடு காணப்படுகிறது. மேலும், நச்சினார்க்கினியரைக் காட்டிலும் கல்லாடனார் சற்று விரிவாக இந்தப் பகுப்பினைப் பற்றி விளக்கியுள்ளார்.

‘தன் கண்ணும் ஒரு தொழில் நிகழ்ந்து செயப்படுபொருளாவனவும் தன்கண் தொழில் நிகழாது செயப்படுபொருளாவனவும் என இருவகைய. தன்கண்ணுந் தொழில் நிகழ்ந்தது அறுத்தல், குறைத்தல் என்பனவாம். அறுத்தல், குறைத்தல் ஆகிய அவ்விரு தொழில் மரம் முதலியதன் கண்ணும் நிகழ்ந்தனவாகலின். தன்கண் தொழில் நிகழாதது, வாய்க்காலைச் சாரும் என்றாற் போல்வன.’

இங்குத் தன்கண் தொழில் நிகழ்வது என்பது எழுவாயால் செய்யப்படும் தொழில் செயப்படுபொருளின் மீது பாதிப்பினை ஏற்படுத்துவது என்று விளக்கலாம். சாத்தன் மரத்தை அறுத்தான் என்பதில் அறுத்தல் தொழில் மரத்தின்மீது நிகழ்த்தப்பட்டுள்ளது. அறுத்தல் தொழில் மரத்தினைப் பாதித்துள்ளது. இந்நிலையில், இப்பகுப்பு முன்னர்க் குறிப்பிட்ட இயற்றப்படுதல், வேறுபடுக்கப்படுதல் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. தன்கண் தொழில் நிகழாதது என்பதில் எழுவாய் ஆற்றும் தொழில் செயப்படுபொருளைப் பாதிப்பதில்லை. மாறாக, எழுவாயின் தொழில் செயப்படுபொருளைச் சென்றடைகிறது. இது காப்பு, ஊர்தி தவிர்ந்ததாக வரும் முதற்பிரிவின் எய்தப்படுதல் என்பதனோடு பொருந்துகிறது. அதற்கு ஏற்றவாறு கல்லாடனாரும் வாய்க்காலைச் சாரும் என்னும் எய்தப்படுதல் சான்றினையே கொடுத்துள்ளார். காப்பும் ஊர்தியும் தன்கண்ணும் தொழில் நிகழ்தல் என்பதனுள் அடங்கும்.

முன்னர்க் குறிப்பிட்டது போன்று, நச்சினார்க்கினியருக்கும் கல்லாடனாருக்கும் இடையில் நுட்பமான வேறுபாடு காணப்படுகிறது. நச்சினார்க்கினியர் தன்கண் தொழில் நிகழ்வது என்று குறிப்பிடக் கல்லாடனார் தன்கண்ணும் தொழில் நிகழ்வது என்று உம்மை கொடுத்துள்ளார். அவர் சான்று காட்டி விளக்கும்போதும் மரம் முதலியதன் கண்ணும் நிகழ்ந்தனவாகலின் என அங்கும் உம்மை கொடுத்தே விளக்குகிறார். எனின், அந்த உம்மை எச்ச உம்மையிற் பாற்படும். ஆனால், அங்கு எஞ்சி நிற்பது எது என்று விளங்கவில்லை. ஒருவேளை, அறுத்தல் தொழிற்குப் பயன்படும் கருவியைக் குறிப்பதாக இருக்கலாம். ஆனால், அது ஏற்புடையதன்று.

சாத்தன் மரத்தை அறுத்தான் என்பதில் கல்லாடனார் கருத்தின்படி அறுத்தல் மரத்தின் கண்ணும் நிகழ்ந்தது என்று உம்மை கொடுத்துச் சொல்லவேண்டும். அவ்வாறாயின் அங்கு வரும் எச்ச உம்மை எதைக் குறிக்கிறது என்ற கேள்வி எழுகிறது. இந்நிலையில், நச்சினார்க்கினியர் உம்மை கொடுக்காது கூறிய தன்கண் தொழில் நிகழ்வது என்பதே ஏற்புடைய பகுப்பாகக் கருதவேண்டியுள்ளது.

### 7.செய்வான் கருத்துள்வழிச் செயப்படுபொருள் – கருத்தில்வழிச் செயப்படுபொருள்

நச்சினார்க்கினியர், கல்லாடனார் ஆகிய இருவரும் இப்பகுப்பினைச் செய்துள்ளனர். ‘சோற்றையட்டான் எனச் செய்வான் கருத்துள்வழிச் செயப்படுபொருளாதலும் சோற்றைக் குழைத்தான் எனக் கருத்தில்வழியாதலும் என இருவகைய’ என்பர் கல்லாடனார். செய்வான் கருத்துள்வழிச் செயப்படுபொருள் என்பது எழுவாய் ஒரு குறிக்கோளுடன்/பிரக்ஞையுடன் ஒன்றை அடைய விரும்பி அதனை அடைதல் எனப் பொருள்படும். எழுவாயின் குறிக்கோள் இன்றி/பிரக்ஞை இன்றி ஒரு செயல் நடைபெறுதல் செய்வான் கருத்தில்வழிச் செயப்படுப்பொருள் எனப் பொருள்படும்.

சாத்தன் சோற்றை அட்டான் என்பதில் சாத்தனின் குறிக்கோள் சோற்றைச் சமைத்தல் என்பதாக உள்ளது. சோற்றினை சமைக்கவேண்டும் என்று சாத்தன் கருதுகிறான். ஆனால், சாத்தன் சோற்றைக் குழைத்தான் என்பதில் சோறு குழையவேண்டும் என்று சாத்தன் கருதவில்லை. சோற்றைக் குழைக்கவேண்டும் என்பது அவனது குறிக்கோள் இல்லை. அவன் கருத்து இல்லாமலேயே அவனை மீறி அந்தச் செயல் நடைபெற்றுவிட்டது. இந்த அடிப்படையிலேயே நச்சினார்க்கினியரும் கல்லாடனாரும் இவ்வாறான பகுப்பு ஒன்றினைக் குறிப்பிட்டுள்ளனர். இந்தப் பகுப்பு முற்கண்ட பகுப்புகளைப் போலல்லாமல் எழுவாயின் நோக்கத்தைப்(Intention) பொறுத்து எழுவாயின் நோக்கம் அல்லது நோக்கமின்மை என்னும் அடிப்படையில் அமைந்துள்ளது. முன்னவை யாவும் வினையினை அடிப்படையாகக் கொண்டும் வேற்றுமை ஏற்கும் பெயரை அடிப்படையாகக் கொண்டும் பகுக்கப்பட்டுள்ளன.

இதுவரை கண்ட பகுப்புகளை நாம் உரையாசிரியர்கள் அடிப்படையில் கீழ்க்காணும் வகையில் அட்டவணைப்படுத்தலாம்.

| **வ.எண்** | **வகைப்பாடு** | **உரையாசிரியர்கள்** |
|---|---|---|
| 1 | இயற்றப்படுவது வேறுபடுக்கப்படுவது – எய்தப்படுவது | சேனாவரையர்<br>நச்சினார்க்கினியர்<br>ஒருவர் |
| 2 | உண்டாக்குதல் வேறுபடுத்துதல் உறுவித்தல் உறுதல் | கல்லாடனார் |
| 3 | காரண காரியம் தோன்ற நிற்றல் தோன்றாது நிற்றல் | தெய்வச்சிலையார் |
| 4 | தெரிநிலைச் செயப்படுபொருள் –தெரியாநிலைச் செயப்படுபொருள் | கல்லாடனார் |
| 5 | செய்வானும் செயப்படுபொருளும் ஒன்றாய் வருவது வேறாய் வருவது | நச்சினார்க்கினியர்<br>கல்லாடனார் |
| 6 | தன்கண் தொழில் நிகழும் செயப்படுபொருள்<br>தன்கண் தொழில் நிகழாச் செயப்படுபொருள் | நச்சினார்க்கினியர்<br>கல்லாடனார் |
| 7 | செய்வான் கருத்துள்வழிச் செயப்படுபொருள்<br>கருத்தில்வழிச் செயப்படுபொருள் | நச்சினார்க்கினியர்<br>கல்லாடனார் |

அட்டவணை 2: உரையாசிரியர்களின் செயப்படுபொருள் பாகுபாடு

## துணைநூற்பட்டியல்

[1] சண்முகம்.செ.வை., தொல்காப்பியத் தொடரியல், சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2004

[2] சிவலிங்கனார்.ஆ (தொ), தொல்காப்பியம் வேற்றுமையியல் – உரைவளம், சென்னை : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2016

[3] முத்துச்சண்முகன் டாக்டர், இக்காலத் தமிழ் வேற்றுமைகள், மதுரை: ஆனந்தா பதிப்பகம், 1988